# நீதிநெறி விளக்கத்தில் அரசமைப்பு

க.பானுப்பிரியா,
முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழ்த்துறை,
நவரசம் கலை மற்றும் அறிவியல்
மகளிர் கல்லூரி அறச்சலூர்,
ஈரோடு 638 101.

**ஆய்வுச் சுருக்கம்**

நீதி இலக்கியங்களில் மன்னன் அரசாட்சியில் செங்கோலாட்சி செய்தாலும் மன்னன் நீதி தவறிவிட்டால் கற்புடையவள் அந்நாட்டையே தீயிட்டு எரித்து விடுவாள் என்பதை காப்பிய நூல் உரைக்கின்றது. முன்னன் நீதி வழங்கும் போது ஆராய்ந்து நீதி வழங்குவதே நல்ல ஆட்சியாக இருக்கும். ஆரசாட்சியில் நன்முறையில் நடைபெற மன்னனுக்கு துணையாக அமைச்சர்கள் இருந்து ஆலோசனை வழங்கியுள்ளார்கள் என்பதை நீதிநெறிகள் கூறப்பட்டுள்ள அரசமைப்பு தொடர்பான கருத்துக்களும் இவ்வாய்வில் கூறப்பட்டுள்ளன.

**முன்னுரை**

சங்க காலம் முதல் இக்காலம் வரையிலும் நடந்த நிகழ்வுகளை இலக்கியங்களாக உருவாக்கியுள்ளார்கள். இலக்கியங்கள் காலத்தை அப்படியே காட்டும் கண்ணாடியாக இருந்து வருகின்றன. சங்கம் மருவிய காலத்தில் பல நீதி நூல்கள் தோன்றி உள்ளன. சங்ககாலத்தில் தவறுகள் நடைபெற்றதால் அத்தவறுகளை சரி செய்வதற்காகவே நீதி நூல்கள் உருவாகின. மன்னனின் கடமை நல்லாட்சி செய்வதிலும், மக்களை நல்வழியில் நடத்துவதிலும் உள்ளது. மன்னனுக்குரிய தகுதி வீரம் கொடை ஆகிய அனைத்தையும் மன்னனாக இருக்கக்கூடியவன் தவறாமல் செய்ய வேண்டும். ஆந்த வரிசையில் ஒவ்வொரு நூற்றாண்டிலும் பல நீதி நூல்கள் தோன்றின. கி.பி 17ஆம் நூற்றாண்டில் குமரகுருபரரால் நீதிநெறி விளக்கம் என்ற நூல் இயற்றப்பட்டது. இவர் சண்முக சிகாமணிக்கும், சிவகாமசுந்தரிக்கும் மகனாகத் தோன்றினார். இவருக்கு பிறந்து ஐந்து வயது வரை பேசும் திறன் இல்லாமல் இருந்தது. தன் ஐந்தாவது வயதில் பெற்றோர்கள் திருச்செந்தூர் முருகனுக்குக் கடுமையான விரதத்தைக் கையாண்டதினால் குமரகுருபரருக்கு பேச்சுத்திறன் கிடைக்கப்பெற்றது. குமரகுருபரர் தன் வாயால் இறைவனை வணங்கினார். இதன் காரணமாக பாடல்கள் மூலம் இறைத் தொண்டாற்றுவதில் குமரகுருபரர் ஈடுபட்டார்.

செங்கோல் ஆட்சியில் தான் மக்கள் மகிழ்ச்சியாக வாழ்கின்றார்கள். மக்கள் துன்பப்பட மாட்டார்கள். செங்கோல் ஆட்சியில்தான் செல்வம் செழிக்கும் நிறைந்திருக்கும். உழவுத் தொழிலும் நன்றாக இருக்கும். இதனால் மக்களுக்கு உணவுத் தட்டுப்பாடும் ஏற்படாது. செங்கோல் ஆட்சியில் மன்னனும் மக்களும் மகிழ்ச்சியாக இருப்பார்கள்.

குமரகுருபரர் சிதம்பரத்தில் இருக்கும் காலத்தில் நீதிநெறி விளக்கம் எழுதினார் என்ற கருத்தை உ.வே.சாமிநாதர் கூறியுள்ளார். இந்நூலில் சிதம்பர நடராசர் கடவுளைக் காப்புச் செய்யுளாக அமைத்துள்ளார். இந்த நூல் திருமலை நாயக்கரின் வேண்டுகோளின் படி நீதிநெறி விளக்கம் இயற்றப்பட்டுள்ளது. கா.சுப்பிரமணியம் பிள்ளை, கால்டுவெல், கூ.வெ.பாலசுப்பிரமணியன், திரிசிரபுரம் வித்துவான், சி.தியாகராச செட்டியார் போன்றோர்

குமரகுருபரர் எழுதிய நீதிநெறி விளக்கத்தைப் பாராட்டியுள்ளார்கள். நீதிநெறி விளக்கத்தில் 101 பாடல்கள் உள்ளன.

நீதிநெறி விளக்கத்தில் ஒருவன் கல்வி கற்றதால் மற்றவர்களிடம் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்றும் படிப்பறிவு பெற்றதன் மூலம் ஏற்படும் விளைவுகளும் கூறப்பட்டுள்ளது. அரசமைப்பில் ஒரு மன்னன் எப்படி ஆட்சி புரிய வேண்டும் மக்களின் தேவையை எவ்வாறு நிறைவேற்ற வேண்டும் என்பதும் கூறப்பட்டுள்ளது. குடிமகன் சமுதாயத்தில் ஒழுக்கமுடன் வாழ எப்படி எல்லாம் நல்ல செயல்களை செய்ய வேண்டும் என்ற கருத்தும் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

**மன்னனின் கடமை:**

மன்னனாக இருக்கக் கூடியவன் தான் மட்டும் மகிழ்ச்சியாக இருந்தால் போதாது தன் நாட்டு மக்களையும் மகிழ்ச்சியாக வைத்திருப்பதே தலையாயக் கடமையாகும். ஒரு நாட்டிற்கு மன்னனாக இருக்கக் கூடியவன் அரசவைக்கு சரியான நேரத்திற்கு சென்று தன் நாட்டு மக்களுக்கு வேண்டிய தேவைகளைப் பற்றி தன் அரசவை அமைச்சர்களிடம் கலந்து பேசி முடிவெடுக்க வேண்டும். நாட்டில் மக்கள் அனைவரையும் சண்டையின்றி மகிழ்ச்சியாக வைத்திருக்க வேண்டும். மக்களுக்கு நற்கருத்துகளைக் கூறவேண்டும். மக்களின் வருமானம், தொழில் போன்றவை எந்த சூழ்நிலைகளில் உள்ளன என்பதைத் தெரிந்து கொண்டு அதற்கு ஏற்ப வரி விதிக்க வேண்டும். தனது படைவீரர்களுக்குப் பயிற்சி அளிப்பதை அடிக்கடி சென்று பார்வையிட வேண்டும். நாட்டு மக்கள் எப்படி இருக்கின்றார்கள் என்பதை நகர்வலம் சென்று பார்வையிட வேண்டும். நீதி தவறாமல் மக்களுக்கு நற்கருத்துக்களை எடுத்துரைத்தல் மன்னனின் தலையாய கடமையாகும். புலவர்களை ஆதரித்து பரிசுகள் வழங்க வேண்டும். இவையே மன்னனின் கடமைகளாகும்.

**"அழல்புரிந்த அடர்தாமரை ஐது அடர்ந்த நூல்பெய்து**
**புனைவினைப் பொலிந்து பொலன்நறுந் தெரியல்**
**பாறுமயிர் இருதலை பொலிய சூடிப்**
**மாண்பும் யுகத்தின் நாள்மகிழ் இருக்கை"**

இப்புறநானூற்றுப் பாடலில் மன்னனின் அன்றாட நிகழ்வுகள் கூறப்பட்டுள்ளன.

மன்னனாக இருக்கின்றவனுக்கு அவனுடைய கடமைகளை சரியாக செய்தால் மட்டும் போதாது ,உடல் தோற்றம் மட்டும் அல்லாது ஒரு நல்லாட்சி நடத்துவதற்கும் அறிவுரை வழங்குவதற்கும், பெரியோர்களின் உறுதுணையும் தேவை. மன்னனுக்கு வீரம் மட்டும் இருந்தால் போதாது விவேகமும் தேவை. பெரியோரின் துணை மற்றும் அரசவையில் இருக்கும் குழுக்களின் துணையும் மன்னனுக்கு வேண்டப்படுகின்ற ஒன்றாகும்.

**மன்னனையே கடவுளாக மக்கள் வணங்குகின்றார்கள்:**

ஒரு நாட்டிற்கு அரசனாக இருக்கின்றவனை அந்நாட்டு மக்கள் கடவுளாக நினைத்து வழிபடுகின்றார்கள். அதற்கு அவன் செய்த நன்மைகளை காரணமாக இருக்கின்றன. மக்கள் அரசனையே கடவுளாக வணங்குவதற்கு அவன் ஆட்சி செய்யும் முறையே காரணமாக அமைகிறது. ஒரு பெண்ணிற்கு கணவனும், குழந்தைக்கு தந்தையும், அறவழியில் செல்லும் துறவிக்கு ஆசிரியரும் தெய்வமாக வணங்கப்படுவர்களாக இருக்கின்றார்கள். அரசன் மக்களிடம்

செங்கோல் ஆட்சி செய்து பாதுகாத்து வருவதால் அவர்கள் அனைவரும் மன்னனையே தெய்வமாக வணங்குகின்றார்கள் என்ற செய்தியை நீதிநெறி நமக்கு எடுத்து கூறுகிறது.

தன் நாட்டு மன்னனை கடவுளாக வணங்குகின்ற மக்களை அம்மன்னன் நல்வழிப்படுத்தியும் நல்லாட்சி புரிந்தும் காவல் செய்கின்றான். "பண்டையத் தமிழ் மக்கள் தங்கள் மன்னர்களைத் தெய்வமாகவே மதித்து வந்தனர். அரசர் வாழ்வே தங்கள் வாழ்வென்று எண்ணி வந்தனர். எல்லாப் பெரியோர்களும் அரசர்களை வாழ்த்தி வந்தனர். இதற்குக் காரணம் அரசர்கள் மக்கள் நலமே பெரிதென்று வாழ்ந்து வந்தான். இதனால் தான் மன்னர்கள் மக்கள் மனதிலே குடியிருந்தனர் என்ற கருத்தை சாமி.சிதம்பரனார் கூறியுள்ளார்.

**மக்களை துன்பப்படுத்தாமல் ஆட்சி செய்தல்:**

மக்களைத் துன்பப்படுத்தி ஆட்சி செய்தால் நீண்ட காலம் நிலையான ஆட்சி செய்ய முடியாது.

**"கண்ணிற் சொலிச்செவியின் நோக்கும் நிறைமாட்சி**
**புண்ணியத்தின் பாலதே ராயினும் -தண்ணளியான்**
**மன்மதனை ஓம்பாதார்க் கென்னாம் வயப்படைமற்றஎன்பதற்கும் ஆணல் லவர்க்கு"**

ஆரசனாக இருக்கின்றவன் ஒற்றர் கொண்டுவரும் செய்தியை அவனின் கண்கள் மூலம் தெரிந்து கொண்டாலும், நாட்டு மக்களைத் துன்பப்படுத்தி ஆட்சி செய்தால் எந்த ஒரு பயனும் ஏற்படாது என்பதை அறிந்திருக்க வேண்டும். இல்லையெனில் இச்செயல் திருநங்கையிடம் படைக் கருவிகளை கொடுத்து போர் செய்வது போல் இருக்கின்றது.

இதனையே இனியவை நாற்பதிலும்,

**"ஒன்றினா னொற்றிப் பொருடெரிதன் முன்னினிதே**
**முற்றான் றெரிறிந்து முறைசெய்தன் முன்னினிதே**
**பற்றிலனாய்ப் பல்லுயிர்க்கு பாத்துற்றப் பாக்களில**

என்ற பாடல் வரியில் தூதுவர் கொண்டு வருகின்ற ஓலையில் இருக்கின்ற செய்திகளையும், நாட்டில் அவன் கண் முன் நடக்கும் நிகழ்வுகளையும் ஒன்றுபடுத்தி பார்த்து ஆட்சி செய்வதும், ஒருவர் குற்றம் செய்திருந்தால் அவன் முன்னர் செய்த நல்ல செயல்களை மட்டும் வைத்துப் பார்த்து செய்த தவறை சரி என்று கூறக்கூடாது. தற்பொழுது செய்த தவறுக்கு முறையான தண்டனை வழங்கவேண்டும். மன்னன் மக்களைக் காயப்படுத்தாமல் ஆட்சி செய்ய வேண்டும் என்பதையே மக்களும் விரும்புகின்றார்கள்.

**"குடிகொன் றிறைகொள்ளுங் கோமகற்குக் கற்றா**
**மடிகொன்று பால்கொளலும் மாண்பே-குடியோம்பிக்**
**கொள்ளுமா கொள்வோர்க்குக் கண்டுமே மாநிதியம்"**

பசு தன் கன்றுக்கு பால் கொடுத்த பிறகு தான் பசுவிடமிருந்து நாம் கறவை செய்ய முடியும். அதற்கு முன் கறவை செய்யவும் முடியாது. அதையும் மீறி நான் கறவை செய்தால் நமக்கு தான் உடலில் காயங்கள் ஏற்படும். அதைப்போல தான் மன்னனும் நாட்டு மக்களிடம்

எந்த அளவிற்கு வரி வசூலிக்க முடியும் என்பதை அறிந்து வரி விதிக்க வேண்டும். அதை விட்டு அதிக வரி வாங்கினால் அவ்வாட்சி நிலையான ஆட்சியாக இருக்காது. மக்களைத் துன்பப்படுத்தாமல் அவர்களால் எந்த அளவு கொடுக்க முடியும் என்பதை அறிந்து வரி விதிப்பதே நல்ல மன்னனின் ஆட்சி ஆகும்.

வரி வாங்கும் முறையை பழமொழி நானூற்றிலும்

**“பொருத்த மழியாத பூந்தண்டார் மன்னர்
அருத்தம் அடிநிழ லாரை-வருந்தாது
கொண்டாரும் போலாதே கோடல் அதுவன்றோ
வண்டூதா துண்டு விடல்”**

என்ற பாடல் வரிகள் வண்டு எப்படி பூவிலிருந்து தேன் எடுக்கின்றதோ அதைப்போல தன் நாட்டு மக்களிடம் வரி வாங்க வேண்டும் என்பதை கூறுகின்றது.

**“இன்று கொளற்பால நாளைக் கொளப்பொறான்
நின்று குரறயிரப்ப நேர்படான்- சென்றொருவன்
ஆவன கூறின் எயிறலைப்பான் ஆறலைக்கும்
வேடலன் வேந்தும் அலன்”**

நேற்று வாங்க வேண்டிய பொருளை இன்று கூட வாங்க நேரம் இல்லாதவனும், நாட்டு மக்களின் குறைகளை சிறிதும் கேட்காத மன்னனும் வேட்டையாடுகின்ற வேடனுக்குச் சமமானவன் ஆவான். ஒரு நாட்டின் மன்னன் மக்களின் நிலையை உணர்ந்து அவர்களின் நிறைகுறைகளை அறிந்து பூர்த்தி செய்பவனே உண்மையான வேந்தன் ஆவான்.

**“இறைகாக்கும் வையகம் எல்லாம் அவனை
முறைகாக்கும் முட்டாச் செயின்”**

என்று மன்னன் நல்லாட்சி செய்வதாலேயே மக்களை மகிழ்ச்சி அடைய செய்ய முடியும் என்பதை திருக்குறளின் மூலம் நாம் அறிய முடிகிறது.

**மன்னனின் தலையாய கடமைகள்:**

மன்னனாக இருக்கின்றவன் பொதுமக்களின் நிலையை அறிந்து வரி விதிக்க வேண்டும். பொது மக்களின் பிரச்சனைகளுக்கு சரியான தீர்வு வழங்க வேண்டும்.

**“முடிப்ப முடித்துப்பின் பூசுவ பூசி
உடுப்ப உடுத்துண்ப உண்ணா இடித்திடித்துக்
கட்டுரை கூறின் செவிகொளா- கண்விழியா
நெட்டுயிர்ப்போ டுற்ற பிணம்”**

உடல் தோற்றத்தில் மற்றும் அரசனாக ,ல்லாமல் அரசனுக்குரிய போர் திறன், அறிவுத்திறன் மக்களின் தேவைகளை பூர்த்தி செய்பவனே உண்மையான அரசன் ஆவான். இதை செய்யவில்லை என்றால் உயிரற்ற பொருளுக்கு ஒப்பானவனாவான்.

அரசன் அரசாட்சி செய்வதை வெற்றி வேற்கையில் “மன்னவர்க்கு அழகு செங்கோன் முறைமை” என்ற பாடல் வரியில் அரசன் தன் நாட்டு மக்களுக்கு வாய்மை தவறாமல் தீர்ப்பு வழங்கி நல்லாட்சி செய்ய வேண்டும் என்பதை கூறுகின்றது.

**“ஒற்றின் தெரியா சிறைப்புறத் தோர்துமெனப்**
**சொன்னோம் துணையாத் தெரிதந்தும் -குற்றம்**
**அறிவரிதென் றஞ்சுவதே செங்கோன்மை சென்று**
**முறையிடினுங் கேளாமை யன்று”**

தூதுவர் மூலமாகவோ அல்லது மன்னனே மாறுவேடத்தில் சென்றோ நாட்டின் நிலையை அறிந்து மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவதே மன்னனின் தலையாய கடமையாகும். மக்களின் மூலம் தெரிய வருகின்ற குற்றங்களை மன்னன் சரி செய்யாமல் இருந்தால் அது நல்லாட்சியாக அமையாது. மக்களின் நலனில் அக்கறை இல்லாதவன் மன்னனாக இருக்க தகுதியற்றவன் .

**“ஏதிலார் யாதும் புகல விறைமகன் கோ தொரீஇக் கொள்கைமுதுக்குறைவு –** காகம் வெள்ளி நிறம் உடையது எனக் கூறுபவனும், தன்னைப் பெற்ற அன்னையைக் கூட கொலை செய்வது தவறு ஒன்றும் இல்லை என கூறுகின்றவனும் பூமியில் வாழ்கின்றார்கள். மன்னனிடம் யார் எதைக் கூறினாலும் அதில் இருக்கின்ற நற்கருத்துக்களையும் தீய கருத்துக்களையும் ஆராய்ந்து அவற்றில் நன்மை தரக்கூடிய கருத்துக்களை மட்டும் எடுத்துக் கொள்பவனே கூர்மையான அறிவு உடைய அரசன் ஆவான். நீதி வெண்பாவில்,

**“தூய வறிவினர்முன் சூழ்துன்ப மில்லையாங்**
**காயும் விடங்கருடற் கிளையாம்-ஆயுங்காற்”**

என்ற பாடல் வரியில் எந்த ஒரு செயலையும் செய்யும் முன்பு நன்கு ஆராய்ந்து செய்தால் எந்த ஒரு துன்பமும் ஏற்படுவதில்லை என்ற கருத்து கூறப்பட்டுள்ளது.

இவ்வகையில் ஒரு நாட்டிற்கு மன்னனாக இருப்பவன் அனைவருக்கும் நற்கருத்துக்களைக் கூறி ஆட்சி செய்வதே சிறந்த மன்னனின் தலையாய கடமை ஆகும்.

**முடிவுரை:**

நல்ஆட்சி, மன்னன் மக்களுக்கு செய்ய வேண்டிய கடமைகள் மன்னன் கடவுளாக வணங்குவதற்கு உண்டான தகுதிகளையும் மக்களின் குறைகளை அறிந்து மன்னன் நிறைவேற்ற வேண்டும் என்பதை பற்றி ஆய்வில் விளக்கப்பட்டுள்ளது.

**பார்வை நூல்கள்:**

1) நீதிநெறி விளக்கம் -கதிர் முருகு
2) பழந்தமிழர் அரசியல்-சிதம்பரனார் சாமி
3) புறநானூறு-பாலையன் - அ.ப
4) நீதி வெண்பா-கதிர் முருகு